பக்கங்கள் 17

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆனி 16 திங்கட்கிழமை 30.06.2025 | அதிர்வு 330

**யாழில் ஐந்து மாதங்களாக**

## ஊசி மூலம் போதையை உடலில் செலுத்தி வந்த இளம் குடும்பஸ்தர் சாவு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் 5 மாதங்களாக ஊசி மூலமாகப் போதைப்பொருளை 04



# செம்மணிப் புதைகுழியை மூடி மறைக்க அனுமதியோம்

## சர்வதேச நிபுணர்களின் மேற்பார்வையின் கீழ் உரிய முறையில் அகழாய்வு செய்யப்பட வேண்டும் என்று சுமந்திரன் வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

"மன்னார் மற்றும் கொக்குத் தொடுவாய் பகுதிகளில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் கைவிடப்பட்டதைப் போல் செம்மணி மனிதப் புதைகுழியையும் மூடி மறைக்க நாம் ஒருபோதும் அனு மதிக்கப் போவதில்லை."

- இவ்வாறு இலங்கைத் தமிழ ரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந் திரன் தெரிவித்தார்.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் கருத்துரைக் கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், 04



# செம்மணி தொடர்பில் நீதியான விசாரணை உறுதி

## கார்பன் பரிசோதனைக்கான ஆய்வுகூடத்தை ஐ.நா. ஆணையரிடம் கோரியுள்ளோம் என்றும் அமைச்சர் பிமல் யாழில் நேற்று தெரிவிப்பு

யாழ். செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் நீதியான விசாரணை நடத்து வோம் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மனித எலும்புக்கூடுகளைக் கார்பன் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கான ஆய்வுகூடம் ஒன்றை வழங்குமாறு ஐக் கிய நாடுகள் மனித உரிமைகள் 04





உள்ளூராட்சி தேர்தல்கள் நடந்து முடிந்து, புதிய சபைகள் மற்றும் நிர்வாகங்களை அமைக் கும் பூர்வாங்கக் கூட்டங்களும் பெரும்பாலும் இன்றைய தினத் துடன் – இந்த மாதத்தின் கடைசி நாளுடன் – முடிவுக்கு வருகின் றன.

தமிழர் தாயகப் பிரதேசத் தைப் பொறுத்தவரை எதிர் பார்த்த அளவுக்கு பெரும்பான் மையான சபைகளை கைப்பற்றி கொண்டமைக்காக இலங்கைத் தமிழரசு கட்சி தனக்குள் திருப் திப்பட்டுக் கொள்ளலாம் என்றாலும், அதற்கும் அப்பால் இனித்தான் உள்ளூராட்சி விவ காரங்களில் நெருக்கடிகளை அக்கட்சி எதிர்கொள்ளப் போகின்றது.

கட்சியின் செயலாளர் 04

# வடக்கு அபிவிருத்தித் திட்டம்: இணைப்புக் குழு முன்மொழிவு









உலக வங்கியால் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளின் தொடர் நடவடிக்கைக்காக இணைப்புக் குழுவொன்று முன்மொழியப்பட்டுள்ளது.

உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தலைமையிலான குழுவினருக்கும், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, சுனில் ஹந்துன்நெத்தி, இ.சந்திரசேகர், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ்.சிறீபவானந்தராஜா, ஜெ.ரஜீவன், க.திலகநாதன், ம.ஜெகதீஸ்வரன், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கின் 5 மாவட்டங்களினதும் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

ஆளுநர் தனது வரவேற்புரையில், ஜனாதிபதியின் வழிகாட்டலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திட்டங்களை முன்னெடுப்பதற்காக வந்துள்ள உலக வங்கிக் குழுவினருக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் சந்திரசேகர், எமது மாகாணத்தைக் கட்டியெழுப்ப உலக வங்கி கரம் கொடுத்து உதவ வேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்தார்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க உரையாற்றும்போது அரசின் சார்பில் உலக வங்கியின் முயற்சிக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

உலக வங்கியால் வடக்கு மாகாணத்திற்கு பல தடவைகள் மேற்கொள்ளப்பட்ட பயணம் மற்றும் அதிகாரிகள், மக்கள் சமூகங்களுடனான கலந்துரையாடலின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் 8 வலயங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்தில் 7 வலயங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3 வலயங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 2 வலயங்களும் வடக்கின் ஏனைய

தொடர்ச்சி▼

# வடக்கு அபிவிருத்தித் திட்டம்: இணைப்புக் குழு முன்மொழிவு









தொடர்ச்சி ▲

3 மாவட்டங்களில் தலா ஒரு வலயங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன. இதில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை இணைக்கும் கொக்கிளாய் பாலமும் முன்மொழிவாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியால் விவசாயம், மீன்பிடி, சுற்றுலாத்துறை, தொழில்நுட்பம் ஆகிய 4 விடயப் பரப்புக்களின் கீழ் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்பதுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் முதல் கட்ட செயற்படுத்தலுக்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஒவ்வொரு மாவட்டங்களினதும் மாவட்ட செயலர்கள் தங்களது மேலதிக தேவைப்படுத்தல்களையும் முன்வைத்தனர். எதிர்காலத்தில் உலக வங்கியால் அவற்றைக் கவனத்தில் எடுக்குமாறும் கோரிக்கை முன்வைத்தனர்.

உலக வங்கியின் செயற்றிட்டத்தைத் தொய்வின்றி விரைவாக செயற்படுத்துவதற்காக இணைப்புக் குழுவொன்றும் முன்மொழியப்பட்டது. அந்தக் குழு அடுத்த கட்ட நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுப்பது என்று நேற்றைய கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.



# கொள்கலன்களை விடுவிப்பதில் ஏற்பட்ட நெரிசல் முழுமையாக தீர்க்கப்பட்டுள்ளது; சுங்கத்திணைக்களம்

கொழும்பு துறைமுகத்தில் இறக்குமதி கொள்கலன்களை விடுவிப்பதில் ஏற்பட்ட நெரிசல் மற்றும் தாமதங்கள் தற்போது முழுமையாக தீர்க்கப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

துறைமுகத்துக்கு வரும் கொள்கலன்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு காரணமாகவே கடந்த பல நாட்களாக அவற்றை விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டதாக சுங் பேச்சாளர் சீவலி அருங்கொட தெரிவித்திருந்தார்.

துறைமுகம் வழக்கமாக நாளொன்றுக்கு சுமார் 1,200 கொள்கலன்கள் கையாளப்பட்டன. எனினும் அண்மைய நாட்களில் அந்த எண்ணிக்கை 2,900 வரை உயர்ந்து, குறிப்பிடத்தக்க நெரிசலை உருவாக்கியது. இதனால் அவற்றை விடுவிப்பதற்கு அனுமதி வழங்கும் செயல்முறையை மந்தப்படுத்தியதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இருப்பினும், நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நிலைவரப்படி, வெளியிட திட்டமிடப்பட்ட அனைத்து நிலுவையில் உள்ள கொள்கலன்களும் விடுவிக்கப்பட்டு, வழக்கமான அனுமதி நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளதாக சுங்க பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்திற்கு புதிய தலைவர்



அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவராக வைத்தியர் சஞ்சீவ தென்னகோன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற, அந்த சங்கத்தின் வருடாந்த தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்று அவர் தலைவராகத் தெரிவாகியுள்ளார்.

அதேநேரம், செயலாளராக வைத்தியர் பிரபாத் சுகததாசவும் மீண்டும் தெரிவாகியுள்ளனர்.

அவர்கள் இருவரும் 60 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று குறித்த பதவிகளுக்குத் தெரிவாகியுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரகசியம் பரகசியம்...

சுமந்திரன் வெளிநாட்டில் இருக்கிறார். அவர் நாடு திரும்பவதற்கு சில வாரங்கள் செல்லலாம். ஆனால் அதற்கிடையில் உள்ளூராட்சி நிர்வாகங்கள் தொடர்பாக – நடந்து முடிந்த விடயங்கள் சம்பந்தமாக – பல நடவடிக்கைகளை அவர் எடுக்க வேண்டி இருக்கும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

பல இடங்களில் நிர்வாகங்களை அமைப்பதில் கட்சி உறுப்பினர்களுக்குள் ஏற்பட்ட குழப்பங்கள் ஒரு புறம் என்றால், மறுபுறம் கட்சித் தலைமை அளித்த வாக்குறுதிகளை புறந்தள்ளி, பிற பங்காளி கட்சிகளின் காலை கடைசி நேரத்தில் வாரி, ஏமாற்றம் அடைய வைத்த (அல்லது ஏமாற்றிய) தமிழரசு உறுப்பினர்கள் மீதும் கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கில் ரிஷாத்தின் கட்சிக்கு வாக்குறுதி அளித்து, அதைப் பயன்படுத்தி தவிசாளர் பதவியை கைப்பற்றி விட்டு, பிரதி தவிசாளர் தெரிவின்போது கட்சித் தலைமையின் வழிகாட்டலுக்கு மாறாக ரிஷாத்தின் கட்சியை வாரிவிட்டனர் சில உறுப்பினர்கள்.

மாந்தை கிழக்கில் அந்த நடவடிக்கை என்றால், திருகோணமலை மாவட்டம் குச்சவெளியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு அதே மாதிரி கால் வார சில உறுப்பினர்கள் வேலை செய்தனர்.

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை விடயத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் இம்ரான் மஹரூப் எம்.பிக்கும் இதே மாதிரி கால் வரப்பட்டதாகத் தெரிகிறது.

இப்படி தமிழரசு கட்சியின் தலைமையோடு இணங்கி உடன்பாட்டுக்கு வந்த முஸ்லிம் தரப்புகளை பல இடங்களில் தமிழரசு கட்சிதான் 'தொப்பி பிரட்டி' ஏமாற்று வேலை செய்திருப்பதாக குற்றச்சாட்டுத் தீவிரமாக எழுந்துள்ளது.

இவை தொடர்பில் எல்லாம் விளக்கம் கேட்டு பதினைந்துக்கும் அதிகமான உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டிய பொறுப்பு கட்சிச் செயலாளருக்கு இப்போது உள்ளது.

தவிரவும், திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் விடயங்களைக் கையாள பொறுப்புகளை ஏற்றவர்கள் செயல்பட்ட விதம் குறித்தும் கட்சித் தலைமை நடவடிக்கை எடுக்க வேண்டிய நெருக்கடி உண்டு.

ஓகஸ்ட் – செப்டம்பர் மாதங்களில் தமிழரசு கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை மாதமாக மாற்றிச் செயல்பட்டால்தான் அக்கட்சி மீண்டும் ஒரு ஒழுங்கு முறைக்குள் வர முடியும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

கட்சியின் தலைவரும் செயலாளரும் என்ன செய்யப் போகிறார்கள்? பார்த்திருப்போம்.

### செம்மணிப் புதைகுழியை...

"இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தில் மனிதப் புதைகுழிகள் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. உண்மை கண்டறியப்பட வேண்டுமானால் இந்த மனிதப் புதைகுழிகளைச் சரியான முறையில் ஆய்வு செய்தாலே பல விடயங்கள் அம்பலமாகும்.

அதனால்தான் 'அணையா விளக்கு' போராட்டம் அறிவிக்கப்படவுடனேயே அதற்கு ஆதரவு தெரிவித்து எமது கட்சியினரும் பெருந் தொகையாக கட்சி அடையாளங்களைத் தவிர்த்து அதிலே கலந்துகொண்டார்கள்.

வெளிநாட்டிலே இருந்த காரணத்தினால் என்னாலும் வேறு சிலராலும் 'அணையா விளக்கு' போராட்டத்தில் நேரடியாகக் கலந்துகொள்ள முடியவில்லை.

செம்மணி மனிதப் புதைகுழியும் வடக்கு, கிழக்கிலே அடையாளப்படுத்தப்பட்டுள்ள மற்றைய மனிதப் புதைகுழிகளும் சர்வதேச நிபுணர்களின் மேற்பார்வையோடு சரியான முறையிலே அகழாய்வு செய்யப்பட வேண்டும். விஞ்ஞான பூர்வமாக இது அணுகப்பட வேண்டும். இதற்கான முயற்சிகளைச் சர்வதேச நிறுவனங்களுடன் நாம் தொடர்ச்சியாகச் செய்து வருகின்றோம். மன்னார் மற்றும் கொக்குத்தொடுவாய் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் கைவிடப்பட்டதைப் போல் செம்மணி மனிதப் புதைகுழியையும் மூடி மறைக்க நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை." – என்றார்.

### ஊசி மூலம்...

உடலில் செலுத்தி வந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு பகுதியைச் சேர்ந்த சக்திவேல் நிதுசன் (வயது 28) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

மேற்படி கடந்த 5 மாதங்களாக ஊசி மூலமாகப் போதைவஸ்தை உடலினுள் செலுத்தி வந்துள்ளார். இந்நிலையில் கடந்த 27ஆம் திகதி அவருக்கு உடல் சுகயீனம் ஏற்பட்டதால் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று பிற்பகல் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

### செம்மணி தொடர்பில்...

ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

மனிதப் புதைகுழி, காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினை எவ்வளவு ஆழமானது என்பதை நாம் அறிவோம். ஆகவே, செம்மணி மனிதப் புதைகுழிக்கான நீதியை நீதிமன்றச் செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டு வழங்குவோம்.

அரசு என்ற ரீதியில் இந்த மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளுக்கு மில்லியன் கணக்கான நிதியை ஒதுக்கியுள்ளோம்." – என்றார்.

# கச்சதீவு இந்தியாவிடம் மீள கையளிக்கக்கப்படமாட்டாது

## அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவிப்பு

இராஜதந்திர ரீதியிலும் சட்ட ரீதியாகவும் இலங்கைக்கு வழங்கப்பட்ட கச்ச தீவு எக்காரணத்துக்காகவும் இந்தியாவிடம் மீள கையளிக்கக்கப்பட மாட்டாது. தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் ஏற்படுத்தும் அழிவினால் எதிர்காலத்தில் பாரிய பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் அமைச்சில் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“இந்தியாவில் தேர்தல் அண்மிக்கும் போது குறிப்பாக தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் கைகளிலெடுக்கும் முதலாவது ஆயுதம் கச்சதீவாகும். கச்சதீவினை இலங்கைக்கு வழங்கியது தவறு என்றும், அதனை நாம் மீளப் பெற்றுக் கொள்வோம் என்றும் தமிழ் நாட்டு அரசியல்வாதிகளால் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுவது வழமையான ஒன்றாகும்.



இது அவர்கள் தமது வாக்குகளை அதிகரித்துக் கொள்வதற்காக பயன்படுத்திக் கொள்ளும் உத்தியாகும். இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கரும் இவ்விடயம் தொடர்பில் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார். கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது தவறு என்றும், அந்த சந்தர்ப்பத்தில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாகவே இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்திய மீனவர்களின் ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகளால் எமது மீன்வளம் மாத்திரமின்றி முழுக்கடல் வளமும் அழிந்து கொண்டிருக்கிறது என்பதை இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன். இந்த அழிவு தொடருமானால் வரும் 15 - 20 ஆண்டுகளில் இலங்கையின் கடல் பாலைவனமாகும் அபாயத்தை தவிர்க்க முடியாது. தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் சதித்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாம் என ஜெய்ஷங்கரிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

சர்வதேச சட்டத்துக்கமைய சட்ட ரீதியாக ஜனநாயகமான முறையிலேயே நாம் கச்சதீவினைப் பெற்றுக் கொண்டோம். எனவே அதனை மீண்டும் வேறு எவரும் கையகப்படுத்துவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. நாம் இது குறித்து இந்திய மத்திய அரசாங்கத்திடமும், தமிழ்நாட்டு அரசாங்கத்திடமும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருக்கின்றோம். எனவே இந்த பிரச்சினை தொடர்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.” - என்றார்.

# கிராமம் , பெருந்தோட்ட மக்களிடையே வாய், கழுத்து புற்றுநோய் அதிகரிப்பு

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு




இந்நாட்டில் பல தசாப்தக் காலமாக பொது சுகாதாரப் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும், குறிப்பாககிராமங்கள்மற்றும்பெருந்தோட்ட பகுதிகளில் வாழும் மக்களிடையே வாய் மற்றும் கழுத்து புற்றுநோய் அதிகரித்துள்ளதாக சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இலங்கை பல் மருத்துவ சங்கத்தின் 92வது வருடாந்திர அறிவியல் அமர்வு, சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் கொழும்பில் உள்ள சினமன் லைஃப் ஹோட்டலில் சமீபத்தில் நடைபெற்றது. இதன்போது கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில், “இலங்கையில் சுமார் 3,500 பல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் உள்ளனர். அவர்களில்பெரும்பாளானோர் அரசு மருத்துவமனைகளில் பணிபுரிகின்றனர்.

தனியார் துறையில் மாத்திரம் சுமார் 300-400 பேர் பணிபுரிகின்றனர். 70-80 பேர் பல்கலைக்கழக அமைப்பிலும் 50-60 பேர் ஆயுதப்படைகளிலும் பணிபுரிகின்றனர்.

தொற்றா நோய்களின் அதிகரிப்பால் இந்நாட்டின் சுகாதாரத் துறை சிக்கலான பொது சுகாதார சவால்களை எதிர்கொண்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, வாய்வழி நோய்கள் உலகளவில் மிகவும் தீவிரமாக அதிகரித்து வரும் தொற்றா நோய்களாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இந்நாட்டில் பல தசாப்த காலமாக பொது சுகாதாரப் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும், குறிப்பாக கிராமங்கள் மற்றும் பெருந்தோட்ட பகுதிகளில் வாழும் மக்களிடையே வாய் மற்றும் கழுத்து புற்றுநோய் அதிகரித்துள்ளது.

புகையிலை பயன்பாடு, வெற்றிலைப் பாக்கு மெல்லும் பழக்கம் மற்றும் உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதில் காணப்படும் பலவீனம் ஆகியன காரணமாக புற்றுநோய் போன்ற ஆபத்து காரணிகள் அம்மக்களிடையே பரவலாக உள்ளன.

பல்மற்றும்வாய்வழிநோய்களைமுன்கூட்டியே கண்டறியாமை மற்றும் உரிய சிகிச்சைகளைப் பெறாமை உள்ளிட்ட ஒரு சில காரணிகள் அம்மக்களின் வாய் சுகாதாரத்தை பேணுவதற்கு தடைகளாக உள்ளன.

வாய்வழி சுகாதாரம் உலகளாவிய சுகாதாரப் பராமரிப்பின் அடிப்படை அங்கமாக மறுவரையறை செய்யப்பட வேண்டும்.

உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவோமாயின் வாய்வழிப் புற்றுநோய் உள்ளிட்ட வாய் சார்ந்த பல நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

வருமானம் மற்றும் தம் வாழும் பகுதியை பொருட்படுத்தாமல், ஒவ்வொருவரும் உரிய வாய் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.”-என்றார்.



# செம்மணி புதைகுழிக்கு நீதி வேண்டி

# திருமலையில் தீப்பந்தப் போராட்டம்!

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்ந்து அகழபட்டு வருகையில் அது தொடர்பான விசாரணைகள் ஒழுங்காக மேற்கொள்ளப்பட்டு நீதி பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தித் தீபந்தப் போராட்டம் ஒன்று திருகோணமலை பட்டணத்தெரு ஊர் மக்களால் நேற்று நடத்தப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களைச் செர்ந்தோர் சுடரை ஏற்றி வைக்க நேற்று மாலை ஐந்து மணியளவில் இது ஆரம்பித்து வைக்கப் பட்டது.

பின்பு தீபந்தங்களை கைகளில் ஏந்தி, ஊர்சுற்றி, கடற்கரைக்கு கொண்டு சென்று அவை கடலில் விடப்பட்டன.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாநகர சபையின் பெருந் தெரு வட்டார உறுப்பினர் உதயகுமார் அஜித்குமார் பங்கு கொண்டார். அவர் “நாங்கள் இந்த நாட்டில் அமைதியாக எல்லோரோடும் இணைந்து வாழ நினைக்கிறோம். ஆனால் எங்களுக்கான நீதி இன்னும் வழங்கப் படவில்லை. தமிழர் தாயகத்தில் நடந்த வன்முறைகள் ஏராளம். இவற்றுக்கான நீதி கிடைக்கும் பொழுது நாட்டில் அமைதி பிறக்கும். அது வரைத் தொடர்ந்து போராட வேண்டும். எமது போராட்டங்களை அடுத்த தலைமுறையினருக்கு கடத்த வேண்டும்.”– என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களது குடும்பங்களைச் சார்ந்தோர், மீனவர் சங்கங்களைச் சார்ந்தோர், மகளிர் சங்கங்களைச் சார்ந்தோர், ஊர் மக்கள், தமிழ் தேசிய உணர்வாளர்கள், இளைஞர்கள், சிறுவர்கள் எனப் பலரும் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.









# தெற்கு படகு விபத்துக்கள்: ஐவரின் சடலங்கள் மீட்பு!

தென்னிலங்கையில் இடம்பெற்ற 4 படகு விபத்துக்களில் காணாமல் போனோரில் 5 பேர் சடலங்களாக மீட்கப் பட்டுள்ளனர்.

தென்னிலங்கையின் தேவேந்திர முனை, ஹிக்கடுவை, தங்காலை, பேரு வளை பகுதிகளில் நேற்றுமுன்தினம் படகுகள் விபத்துக்குள்ளாகின.

தங்காலை – பரவிவெல்ல பகுதியில் கரை திரும்பிக் கொண்டிருந்த பல நாள் படகு கவிழ்ந்ததில் இருவர் காணாமல் போயினர். 4 பேர் டிங்கி படகின் உதவி யுடன் மீட்கப்பட்டனர். இந்தநிலையில், காணாமல்போனோரைத்

தேடும் பணியில் விமானப் படை யினர் ஈடுபட்டிருந்தனர். அதில் ஒருவ ரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. மற்ற வரைத் தேசம் பணி இடம்பெற்று வருகின் றது.

இதேபோன்று, பேருவளை கடற்பரப் பில் கவிழ்ந்த படகில் இருந்த இரண்டு சகோதரர்களின் சடலங்கள் நேற்றுக் காலை பெந்தோட்டை கடற்கரையில் கரை யொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டன.

தேவேந்திரமுனையில் படகு கவிழ்ந்த விபத்தில் அந்தப் படகில் பய ணித்த ஐவரில் இருவர் உயிரிழந்த னர். இருவர் காப்பாற்றப்பட்டனர். ஒரு வரைத் தேடும் பணி தொடர்கின்றது.

இதேநேரம், ஹிக்கடுவையில் படகு கவிழ்ந்தபோது 6 பேர் அதில் பயணித் திருந்தனர். எனினும், அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர் என்றும் தெரியவருகின்றது.



# இன்று விசேட நாடாளுமன்ற அமர்வு

பிரதமரின் வேண்டுகோளுக்கி ணங்க நாடாளுமன்றத்தின் நிலையியற் கட்டளையின் 16ஆம் பிரிவின் பிரகாரம் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்குச் சபாநாயகரால் பிரசுரிக்கப்பட்ட வர்த்த மானிக்கு அமைய விசேட நாடாளு மன்ற அமர்வு இன்று திங்கட்கிழமை நடை பெறவுள்ளது.

2024ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத் தின் 11வது பிரிவுக்கு அமைய அரசால் நிதி செயல்நுணுக்கக் கூற்று ஜூன் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட வேண்டும் என்ற தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் விசேட நாடாளு மன்ற அமர்வு இன்று நடைபெறவுள் ளது.

இதற்கமைய நாடாளுமன்றத் தின் நிலையியற் கட்டளை 16 இற்கு அமைய பிரதமரினால் விடுக்கப்படும் கோரிக்கைக்கு அமைய சபாநாயகரி னால் நாடாளுமன்றம் இன்று மு.ப. 9.30 மணிக்குக் கூட்டப்படவுள்ளது. இது தொடர்பில் ஆளும் கட்சியால் கொண்டு வரப்படும் சபை ஒத்திவைப்பு விவாதத்தை பி.ப. 4.30 மணி வரை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மின்சார சாதனை

இலங்கைமின்சாரசபைஇப்போது விடுத்துள்ள அறிக்கை ஒன்று பலரையும் ஆச்சரரியத்துக்குள் மூழ்கடித்து இருக்கின்றது. நம்ப முடியாததாகவும் இருக்கின்றது.

அவ்வப்போது மின் கட்டண விலை உயர்வுகள் பற்றிய அறிவிப்புகளைத் தந்து மக்களுக்கு 'ஷொக்' அடிக்க வைக்கும் மின்சார சபை இப்போது தன்னுடைய சாதனை ஒன்று பற்றிப் பேசி இருக்கின்றது.

1990 களின் முற்பகுதிக்கு பின்னர் முதல் முறையாக இலங்கை அதன் எரிசக்தி மாற்றத்தில் ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது என்றும், ஜூன் 2025 இல் நாட்டின் மின்சாரத்தில் 72 வீதம் புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டது என்றும் இலங்கை மின்சார வாரியம் தெரிவித்துள்ளது.

வழமையாக ஆண்டில் மின்சாரம் அதிக தேவை உள்ள மாதங்களில் ஒன்றில் இந்தச் சாதனை எட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். ஒரு வகையில் இது நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்கட்டமைப்பின் விருத்தி மற்றும் வளர்ந்து வரும் திறனை எடுத்துக் காட்டுகிறது என்பது மெச்சத்தக்கதுதான்.

1990 களின் முற்பகுதி வரை இலங்கையின் மின்சார உற்பத்தி கிட்டத்தட்ட முழுமையாக நீர் சார்ந்ததாக இருந்தது. இருப்பினும், வளர்ந்து வரும் எரிசக்தி தேவைகள் மற்றும் பருவகால மாறுபாடு காரணமாக, அடுத்த தசாப்தங்களில் நாடு கலப்பு நீர் மற்றும் வெப்ப (எரிபொருள் மற்றும் கரி போன்ற) அமைப்பை நோக்கி நகர்ந்தது.

இப்போது புதுப்பிக்கத் தக்க மூலங்களில் இருந்து மின் உற்பத்தி என்பது தேசிய மட்டத்தில் சுத்தமான எரிசக்தி ஆதிக்கம் முழு வட்டமாகத் திரும்புவதைக் குறிக்கிறது எனலாம்.

சூரிய, காற்றாலை மற்றும் சிறிய நீர் மின் திட்டங்களில் தொடர்ச்சியான இலங்கையின் நிலையான ஆற்றலுக்கான உறுதிப்பாட்டையும், புதைபடிவ எரிபொருள்களைச்சார்ந்திருப்பதைக் குறைப்பதையும் இது பிரதிபலிக்கிறது.

ஆயினும் இத்துறையில் இன்னும் கடக்க வேண்டிய பல மைல்கற்கள் முன்னே காத்திருக்கின்றன. மின் விநியோகத்துறையில் எரிபொருள் மின்விநியோக மாஃபியாக்களின் கொட்டத்தை முழுமையாக அடக்க வேண்டியுள்ளது. சூரிய மின்சக்தியை உருவாக்கும் தனியார் தரப்பிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கான ஒரு சீரான முறைமையோ அல்லது அதற்கான மின் விநியோகப் பாதை வலையமைப்போ நாட்டில் ஒழுங்காக இல்லை என்பதை அண்மைக் கால நிகழ்வுகள் அம்பலப்படுத்தி நிற்கின்றன.

புதுப்பிக்கத்தக்க மூலங்களில் இருந்து மின்சாரத்தை பெற்றுக் கொள்ளும் முறைமை கணிசமான அளவுக்கு நடைமுறைக்கு வந்தாலும் அதனைப் பேணுவதற்கான ஒழுங்குமுறைகளை இன்னும் ஒரு சீராக இலங்கை மின்சார சபை உருவாக்கவில்லை என்பதுதான் யதார்த்தக் கள நிலைமையாகும்.

அந்த மாற்றத்தை இலங்கை மின்சார சபை செய்து முடித்தால் மட்டுமே இந்த விடயத்தில் அது பெருமை கொள்ள முடியும்.






# ‘ஸ்ரீ சிகரம் அறக்கட்டளை’யின் பரிசளிப்பு சிறப்புற நேற்று பொகவந்தலாவை நகரில்

**(பொகவந்தலாவை நிருபர்: எஸ் சதீஸ்)**

‘ஸ்ரீ சிகரம் அறக்கட்டளை’யின் பரிசளிப்பு விழா பொகவந்தலாவ ‘லா வைட் மண்டபத்தில்’ அறக்கட்டளையின் ஸ்தாபகர் மற்றும் பணிப்பாளர் திருமதி அகிலா கயிலைநாதன் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற உதவிக் கல்வி பணிப்பாளர் திருமதி சந்திரலேக்கா, அறக்கட்டளையின் பணிப்பாளர் ரமேஷ்குமார், இளையராஜா, திருமதி தமயந்தி, திருமதி கமலராணி, அதிபர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர், கிராம சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் மஸ்கெலியா, ஹட்டன், புளியாவத்த, நோர்வூட், பொகவந்தலாவ ஆகிய பிரதேசங்களில் தையல் பயிற்சி பெற்ற மாணவர்கள் மற்றும் பேரிஸ் பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தமையோடு மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.













# யாழ். பல்கலை சட்டத்துறையின் 20 ஆவது ஆண்டு பூர்த்தி நிகழ்வு

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை ஆரம்பிக்கப்பட்டு இருபது ஆண்டுகள் பூர்த்தியாகுவதையிட்டு பல்கலைக்கழக சட்டத்துறையின் ஏற்பாட்டில் நேறையதினம் விசேட நிகழ்வொன்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இன்று காலை நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி.நவாஸ்/ம் கௌரவ விருந்தினராக சட்டத்தரணி மாலா சபாரத்தினமும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை தொடர்பான ஆவணப்படமொன்று வெளியிடப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதி நிஸாந்தவின் நெறியாள்கையில் நடைபெற்ற குழு விவதாத்தில் இலங்கை சட்டக் கல்லூரி அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி பிரசாந்தலால் டி அல்விஸ், சட்டத்தரணி எல்.இளங்கோவன், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து, சட்டத்தரணி எர்மிசா டெகல், சட்டத்தரணி லக்ஸ்மனன் ஜெயகுமார் ஆகியோர் நேரடியாக பங்கேற்றதுடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய இணைய வழியில் இணைந்தார்.

இதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கோசலை மதன், நீதிபதிகள், சட்டத்தரணிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், சட்டத்துறை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.











# 18 உயர் அரசு அதிகாரிகள் விசாரணை வலயத்துக்குள்




பல்வேறு ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ள அமைச்சுச் செயலாளர்கள் உட்பட 18 உயர் அரசு அதிகாரிகளுக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த விசாரணைகளை லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையம் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை ஆகியவையும் நடத்துகின்றன.

ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளான ஐந்து அரசு அதிகாரிகள் தற்போது வெளிநாட்டில் இருக்கின்றனர் எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தேவைப்பட்டால் இந்த அதிகாரிகளை நாட்டிற்கு அழைத்து வரவோ அல்லது கைது செய்யவோ நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஊழல் மற்றும் முறைகேடுகளைச் செய்வதற்கு அரசியல்வாதிகளுக்கு உதவினர் எனக் குற்றம் சாட்டப்பட்ட இந்த பொது அதிகாரிகள், அந்த முறைகேடுகளால் பயனடைந்துள்ளனர் எனவும் விசாரணைக் குழுக்கள் கூறுகின்றன.

பல அதிகாரிகள் மில்லியன் கணக்கான ரூபா மதிப்புள்ள நிலம், வாகனங்கள் மற்றும் பிற சொத்துக்களை வாங்கியமை பற்றிய தகவல்களும் வெளியாகியுள்ளன.

புலனாய்வுக் குழுக்கள் தற்போது இந்த அதிகாரிகளின் வங்கிக் கணக்குகளை ஆய்வு செய்து வருகின்றன.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்த வழக்கில் கைது செய்யப்பட்ட சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளரின் சொத்துக்கள் குறித்தும் லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு விசாரணையை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# எரிபொருள்களின் விலையில் மாற்றம் எதுவுமே வராது என்கிறது பெட்ரோலியக் கூட்டுத்தாபனம்



ஜூலை மாதத்திற்கான எரிபொருள் விலையில் எந்த மாற்றமும் இருக்காது என்று இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

வழமை போல மாத முடிவான இன்றைய தினம் கூடவுள்ள எரிபொருள் விலை நிர்ணயக் குழுவால் விலை நிர்ணயம் குறித்த இறுதி முடிவு எடுக்கப்படும் என்றாலும், திருத்தம் எதுவும் எதிர்பார்க்கப்படவில்லை என்று பெட்ரோலியக் கூட்டுத்தாபன நிர்வாகப் பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலைகள் நிலைத்த நிலையில் தொடர்வதால், ஜூலை மாதத்தில் இலங்கையில் எரிபொருள் விலை மாற்றம் ஏற்படக்கூடிய வாய்ப்பு குறைவாக உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், "உலக சந்தையில் மசகு எண்ணெய் விலைகள் கடந்த சில வாரங்களாக நிலைத்துள்ளமையோடு, சில சமயங்களில் விலை குறையும் சாத்தியம் கூட காணப்படுகின்றன. இந்த நிலைமை தொடருமானால், ஜூலை மாதத்தில் எரிபொருள் விலைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படமாட்டாது" என்றார்.

இதன்படி, விலை நிர்ணய குழு, கடந்த மாதத்திற்கான சராசரி எரிபொருள் விலை மற்றும் சமீபத்திய இறக்குமதி செலவுகளை அடிப்படையாகக் கொண்டு ஜூலை மாத விலையை தீர்மானிக்கவுள்ளது.




# வெற்றிப் பாதையில் இலங்கை மின்சார சபை

இந்த ஆண்டு ஜூன் மாதமளவில் இலங்கை மின்சார சபையானது 70 சதவீதம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை பூர்த்தி செய்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

1990ஆம் ஆண்டின் முற்பகுதிக்குப் பிறகு முதல் முறையாக, இலங்கை மின்சார சபையானது இந்த மாத நிலவரப்படி அதன் மொத்த மின்சார உற்பத்தியில் 70 சதவீதத்தை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்து பெற்றுள்ளது.

ஏனைய மாதங்களைவிட இந்த மாதம் தேவை அதிகமாக இருந்த நிலையிலும் இவ்வாறு பூர்த்தி செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் மின்சார விநியோகம் சுமார் 100 சதவீதம் நீர் மின்சாரம் சார்ந்தது என்ற ஆரம்பக்கால கொள்கையிலிருந்தும், காலப்போக்கில் பின்பற்றப்பட்ட கலப்பின நீர் மின் – அனல் மின் கொள்கையிலிருந்தும் இது ஒரு விலகலைக் காட்டுவதாக மின்சார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

புதுப்பிக்கத்தக்க மின்சார சதவீத்தை அதிகரிப்பதற்கான இலங்கை மின்சார சபையின் நிலையான திட்டத்தின் வெற்றியை இது பிரதிபலிப்பதாகவும் இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

# உப்புக்கான அதிகபட்ச சில்லறை விலை இதுவரையிலும் நிர்ணயிக்கப்படவில்லை





உப்புக்கான அதிகபட்ச சில்லறை விலை இதுவரையிலும் நிர்ணயிக்கப்படவில்லை என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபைக்கும் உப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்துக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் உப்புக்கான அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் செய்திகள் பரப்பப்படுகின்றன.

இவ்வாறு பரப்பப்படும் செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், அவ்வாறான எந்தவொரு கலந்துரையாடலும் முன்னெடுக்கப்படவில்லை எனவும் நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.






# அணுசக்தி விபத்தில் ஏற்படும் கதிர்வீச்சு விளைவுகளை கண்காணிக்க நடவடிக்கை

அணுசக்தி விபத்தின் போது நாட்டிற்கு ஏற்படும் கதிர்வீச்சு விளைவுகளை கண்காணிக்கக்கூடிய முன்கூட்டிய எச்சரிக்கை கட்டமைப்பை ஸ்தாபிக்க இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை நடவடிக்கை எடுத்துள்ளது.

அணுசக்தி முகவர் நிறுவனத்துடன் இணைந்து இந்த திட்டத்தை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள கடற்படை முகாம்களை கேந்திரமாக கொண்டு 5 இடங்களில் இந்த அமைப்புகள் நிறுவப்படவுள்ளதாக இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் ஆய்வு மற்றும் அமுலாக்கப்பிரிவின் பணிப்பாளர் பிரகீத் கடதுன்ன தெரிவித்தார்.

இந்த கட்டமைப்பின் ஊடாக நாட்டிற்கு அருகிலுள்ள நாடுகளில் உள்ள அணுசக்தி நிலையங்களில் ஏற்படும் இயற்கையான அல்லது செயற்கை விபத்துகளின் போது நாட்டிற்குள் வரும் கதிர்வீச்சை அவதானிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கற்பிட்டி, மன்னார், நெடுந்தீவு, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் இந்த கட்டமைப்புகள் நிறுவப்படவுள்ளதாக இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் ஆய்வு மற்றும் அமுலாக்கப்பிரிவின் பணிப்பாளர் பிரகீத் கடதுன்ன தெரிவித்தார்.

# விசேட டெங்கு ஒழிப்பு இன்று முதல் ஆரம்பம்



இன்று முதல் எதிர்வரும் ஜுலை மாதம் 5 ஆம் திகதி வரை விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

16 மாவட்டங்களில் உள்ள 111 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் வைத்திய நிபுணர் பிரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் டெங்கு நோயினால் 16 பேர் உயிரிழந்தனர்.

அத்துடன், டெங்கு நோய்க்குள்ளான 28,228 அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, திருகோணமலை, மட்டக்களப்பு, கண்டி, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் நிலவிய சீரற்ற கால நிலையை அடுத்து, நுளம்பு பெருக்கம் அதிகரித்துள்ளது.

இதனைக்கருத்திற் கொண்டு, நாளை முதல் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தநிலையில், வீடு, பாடசாலைகள், பணியிடங்கள் மற்றும் வணக்கஸ்தலங்கள் உள்ளிட பல இடங்களை தூய்மையாக வைத்திருக்குமாறு தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் வைத்திய நிபுணர் பிரஷீலா சமரவீர பொதுமக்களை கோரியுள்ளார்.

# இலங்கை கடற்படையினரால் 8 தமிழ்நாடு மீனவர்கள் கைது

## ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 8 மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகையும் பாதுகாப்பாக மீட்டுக் கொண்டு வரவும், மீனவர்கள் பிரச்சினைகளைக் கையாள்வதில், இலங்கை அதிகாரிகளுடன் உரிய தூதரக நடவடிக்கைகளை முன்னெடுக்க வலியுறுத்தியும் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

"இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 8 மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகையும் பாதுகாப்பாக மீட்டுக் கொண்டு வருவதை உறுதி செய்யவும், மீன்பிடி தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வதில், கட்டுப்பாடு மற்றும் பரஸ்பர புரிதலை உறுதி செய்வதற்கு இலங்கை அதிகாரிகளுடன் உரிய தூதரக நடவடிக்கைகளை முன்னெடுக்க வலியுறுத்தியும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் இந்திய மீனவர்கள், குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பையும் கடுமையாக பாதிக்கும் இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கை குறித்து ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சரின் கவனத்தை ஈர்த்துள்ள முதலமைச்சர், 29.06.2025 அன்று இலங்கை கடற்படையினர் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 08 மீனவர்களுடன், அவர்களது இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகையும் சிறை பிடித்துள்ளனர் என வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய கைது நடவடிக்கைகள், படகுகள் மற்றும் உபகரணங்கள் இழப்பிற்கும், நீண்டகால சிறை பிடிப்பிற்கும் வழிவகுப்பதோடு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் பெரும் மன உளைச்சலை ஏற்படுத்துகிறது. எனவே கைது செய்யப்பட்ட மீனவர்களையும் அவர்களது படகையும் பாதுகாப்பாக மீட்டுக் கொண்டு வருவதை உறுதி செய்ய ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் உடனடியாக தலையிட வேண்டும்.




வருடாந்த மீன்பிடி தடைக்காலம் முடிவடைந்து, மீன்பிடிப் பருவம் மீண்டும் தொடங்கியுள்ள நிலையில், நமது மீனவர்கள் வாழ்வாதாரம் ஈட்டும் நம்பிக்கையுடன் மீன்பிடிக்க கடலுக்குத் திரும்பியுள்ளனர். அவர்கள் மீன்பிடி தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வதில், கட்டுப்பாடு மற்றும் பரஸ்பர புரிதலை உறுதி செய்ய இலங்கை அதிகாரிகளுடன் உரிய தூதரக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# கூட்டணி குறித்த தே.மு.தி.க. நிலைப்பாடு ஜனவரியில் அறிவிக்கப்படும்; பிரேமலதா



2026 தேர்தல் கூட்டணி நிலைப்பாடு குறித்து தங்கள் கட்சி சார்பில் ஜனவரி மாதம் நடைபெறும் மாநாட்டில் அறிவிக்கப்படும் என தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார்.

கோவை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"தே.மு.தி.க. தற்போது எட்டு மண்டலமாக பிரிந்து தமிழ்நாடு முழுவதும் 8 மண்டல பொறுப்பாளர்கள், மாவட்ட பொறுப்பாளர்கள், தொகுதி பொறுப்பாளர்களை அமைத்து தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் பூத் கமிட்டி அமைக்கும் பணிகள் வெகு விரைவாக நடைபெற்று வருகிறது. ஒரு மாதத்திற்கு பின் தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. கட்சியின் வளர்ச்சியில் மட்டுமே அதிகம் கவனம் செலுத்தி வருகிறோம். கடலூரில் 2026 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி மாநாடு நடைபெற உள்ளது. அன்றைய தினம் தேர்தல் கூட்டணி நிலைப்பாடு குறித்து அறிவிக்கப்படும். தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணியில் தமிழக கட்சி தலைமை வகித்தால் சிறப்பாக இருக்கும். கூட்டணி என்பது வரவேற்கத்தக்கது.

போதைப்பொருள் பயன்பாடு தொடர்பாக நடிகர்கள் கைது செய்யப்பட்ட சம்பவத்தை அவர்கள் மட்டும் அதை பயன்படுத்தியதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. தமிழகமே போதை வஸ்துக்களால் மூழ்கி இருக்கிறது. இது யாரும் மறுக்க முடியாத ஒன்றாகும். போதை இல்லாத, டாஸ்மாக் மதுமானம் இல்லாத, கள்ளச் சாராயம் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும்.

நடிகர் விஜய் பொறுத்தவரை நான் அவருக்கு அறிவுரை கூற வேண்டியது இல்லை. அவருக்கான முடிவை அவர் தான் எடுக்க வேண்டும்." என்றார்.

# இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் நிறுத்தம்; மீண்டும் வலியுறுத்தினார் டொனால்ட் ட்ரம்ப்



இஸ்ரேல் ஹமாஸ் இடையேயான போர் நிறுத்த பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றம் காண வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வரும் வாரங்களில் வொஷிங்டன் செல்ல திட்டமிட்டுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. நெதன்யாகுவின் அமெரிக்க வருகைக்கான காரணம் குறித்து இதுவரை அதிகாரபூர்வ அறிக்கை எதுவும் வெளியாகவில்லை. எனவே இந்தப் பயணம் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்காக இருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் டொனால்ட் ட்ரம்ப் இன்று, “காசாவில் ஒப்பந்தம் மேற்கொள்ளுங்கள். பணயக்கைதிகளை திரும்பப் பெறுங்கள்.” என்று தனது சமூக ஊடக தளத்தில் பதிவிட்டுள்ளார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை இறுதி செய்ய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை வலியுறுத்துவதாக இந்தப் பதிவு அமைந்துள்ளது.

முன்னதாக, கடந்த வெள்ளிக்கிழமையன்று, அடுத்த வாரத்திற்குள் காசாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படக்கூடும் என்று டொனால்டு ட்ரம்ப் கூறினார். காசாவில் போரை முடிவுக்கு கொண்டுவர இஸ்ரேல் மற்றும் ஹமாஸுக்கு ட்ரம்ப் பலமுறை அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த நிலையில், இஸ்ரேல் நாட்டில் ஊழல் குற்றச்சாட்டுக்காக விசாரணை வளையத்தில் உள்ள நெதன்யாகுவுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் குறித்து விமர்சித்த டொனால்ட் ட்ரம்ப்,

“நெதன்யாகு இப்போது ஹமாஸுடன் ஒரு ஒப்பந்தத்துக்காக பேச்சுவார்த்தை நடத்தும் பணியில் ஈடுபட்டுள்ளார், அதில் பணயக்கைதிகளை திரும்பப் பெறுவதும் அடங்கும். இஸ்ரேலிய பிரதமரை எதற்கும் இல்லாமல் நாள் முழுவதும் நீதிமன்றத்தில் உட்கார வைப்பது எப்படி சாத்தியம்.” என்று தெரிவித்தார்.

# உக்ரைன் மீது ரஷ்யா வான்வழித் தாக்குதல்!

## 477 ட்ரோன்கள், 60 ஏவுகணைகள் வீச்சு



உக்ரைனுக்கு எதிராக ஒரே இரவில் மிகப் பெரிய வான்வழித் தாக்குதலை ரஷ்யா நடத்தியது. இதில் 477 ட்ரோன்கள் மற்றும் 60 ஏவுகணைகள் உட்பட மொத்தம் 537 வான்வழி ஆயுதங்களை ரஷ்யா வீசியது. இந்த தாக்குதலில் ஒரு குழந்தை உட்பட 6 பேர் காயமடைந்தனர்.

இதுகுறித்துஉக்ரைன்ஜனாதிபதிவொலொடிமிர்ஜெலன்ஸ்கி வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

“கிட்டத்தட்ட இரவு முழுக்க உக்ரைன் முழுவதும் வான்வழித் தாக்குதல் எச்சரிக்கை சைரன்கள் ஒலித்தன . 477 ட்ரோன்கள் மற்றும் பல்வேறு வகையான 60 ஏவுகணைகள் ஏவப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை ரஷ்ய - ஈரானிய ஷாஹெட்கள். உக்ரைனில் உள்ள அனைத்தையும் ரஷ்யா குறிவைத்தது. ஸ்மிலாவில் உள்ள ஒரு குடியிருப்பு கட்டிடமும் தாக்கப்பட்டது, இதில் ஒரு குழந்தை காயமடைந்தது. அவசர உதவிகள் தேவைப்படும் இடங்களில் மீட்புக் குழுக்கள் பணியாற்றி வருகின்றன.

துரதிர்ஷ்டவசமாக, இந்த தாக்குதலை முறியடிக்கும் போது, எங்கள் எஃப்-16 விமானி மக்ஸிம் உஸ்டிமென்கோ உயிரிழந்தார். இன்று அவர் 7 வான்வழி ஏவுகணைகளை அழித்தார். அவரது குடும்பத்தினருக்கு எனது இரங்கல். அவரது மரணத்தின் அனைத்து சூழ்நிலைகளும் விசாரிக்கப்பட வேண்டும் என்று நான் அறிவுறுத்தியுள்ளேன். கடந்த வாரத்தில் மட்டும் 114 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகள், 1,270 இற்கும் மேற்பட்ட ட்ரோன்கள் மற்றும் 1,100 கிளைடு குண்டுகளை ரஷ்யா வீசியுள்ளது.

உலக நாடுகளின் அமைதிக்கான அழைப்புகளை மீறி, புடின் நீண்ட காலத்திற்கு போரை நடத்த முடிவு செய்துள்ளார். இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். எனவே, ரஷ்யாவின் மீது அழுத்தம் தேவை, எங்களுக்கு பாதுகாப்பும் தேவை. இதனால் பாலிஸ்டிக் மற்றும் பிற ஏவுகணைகளிலிருந்தும், ட்ரோன்களிலிருந்தும் பாதுகாக்க உக்ரைன் அதன் வான் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும். இதற்காக அமெரிக்க வான் பாதுகாப்பு அமைப்புகளை நாங்கள் வாங்கத் தயாராக இருக்கிறோம். இதற்காக அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் எங்கள் அனைத்து நட்பு நாடுகளின் ஆதரவையும் விரும்புகிறோம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

இரவு நடந்த மிகப் பெரிய வான்வழித் தாக்குதல் உக்ரைன் முழுவதும் உள்ள பகுதிகளை இலக்காகக் கொண்டு தாக்கியது என்று உக்ரைன் விமானப்படையின் தகவல் தொடர்புத் தலைவர் யூரி இஹ்னாட் தெரிவித்தார். மேலும், இந்த தாக்குதலின் போது ட்ரோன்கள், பாலிஸ்டிக் மற்றும் க்ரூஸ் ஏவுகணைகள் உட்பட சுமார் 500 வகையான வான்வழி ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்தது.

# இன்றைய ராசி பலன்கள் - 30.06.2025




இன்று அவ்வளவு எளிதாக எதையும் பெற முடியாது. எனவே கவனமாகவும் உறுதியாகவும் செயல் பட வேண்டிய நாள்.

பணியைப் பொறுத்தவரை இன்று பலன் தரும் நாளாக இருக்காது. இன்று கூடுதல் பணிகள் காணப்படும். என்றாலும் நீங்கள் நீங்கள் முறையான திட்டமிடல் மூலம் பணிகளை கையாள் வீர்கள்.

உங்கள் தாயுடனான கருத்து வேறுபாடு வீட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும். நீங்கள் சூழ்நிலையை பக்குவமாக கையாள வேண்டும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. உங்கள் ஒவ்வொரு பணத்தையும் கவனமாக செலவு செய்ய வேண்டும்.உங்கள் தாயின் உடல் நலத்துக்காக பணம் செலவு செய்ய நேரும்.




இன்று பாதுகாப்பின்மை உணர்வு நிரம்பி காணப்படும். எனவே எந்த விஷயத்தையும் நீங்கள் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் அதிக பொறுப்புகள் காணப்படும். பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இது உங்கள் ஆர்வத்தை மேம்படுத்த உதவும்.

நீங்கள் உங்கள் உறவில் உள்ள பிரச்சினையை தீர்ப்பதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் துணையிடம் இது பற்றி பேசுவீர்கள்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைவு. உங்கள் செலவுகளை கண்காணிக்கவும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று நீங்கள் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் காணப்படுவீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்களின் நட்பு பட்டியலில் கூடுதல் நண்பர்கள் இடம் பெறுவார்கள்.

உங்கள் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் தொடர்பாடல் திறன் உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை மேம்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் இன்று உங்களுக்கு பண வரவு காணப்படும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சிறப்பாக வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிக்கும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் அணுகு முறையில் நம்பிக்கை காணப்படும்.

பணி நிமித்தமான பயணம் காணப் படுகின்றது. உங்கள் திறமையை பயன் படுத்தி நன்மை அடைவீர்கள் மற்றும் இலக்குகளை குறித்தநேரத்தில் அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பாக நேரத்தை செலவிடு வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு சென்று மகிழும் வாய்ப்பு உள்ளது.

சிறுகடன் வகையில் இன்று பண வரவு ஏற்பட வாய்ப் புள்ளது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள போதிய அளவு பணம் காணப்படும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண போராட வேண்டும். தியானம் அல்லது யோகா பயில்வதன் மூலம் பதற்றத்தைச் சமாளிக்கலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும்.பதற்றத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் தவறு காண்பீர்கள்.இதனால் விரோதம் விளையும். இதனை சமாளிக்க முயல வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் நிதிநிலையை சமாளிக்க நீங்கள் கண்டிப்பான திட்டம் மேற்கொள்ள வேண்டும்.

சளி மற்றும் தலை வலி காரணமாக உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




எதிர்மறை எண்ணங்கள் உங்கள் நம்பிக்கையை குலைக்கும். நீங்கள் நம்பிக்கை உணர்வை மேற்கொள்ள வேண்டும்.

மந்தமான சூழ்நிலை காணப்படும். உங்கள் செயல்திறன் மூலம் இந்த நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக்கொள்ளலாம்.

உங்கள் துணையின் நடத்தை உங்களை உணர்ச்சிவசப்பட வைக்கும். இது குடும்ப சூழ்நிலையின் மகிழ்ச்சியை குறைக்கும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அது மகிழ்ச்சிகரமாக இருக்கது. உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும். நிதிநிலையில் ஏற்றத்தாழ்வுகளை சந்திப்பீர்கள்.

பதற்றமும் பேரார்வமும் ஆரோக்கியத்திற்கு உகந் ததல்ல.இத்தகைய உணர்வுகளை சமாளியுங்கள்.




நீங்கள் விரைந்து பணிகளை முடிப்பீர்கள். உங்கள் தன்னம்பி கையை வளர்த்துக் கொள்வீர்கள்.

உங்கள் பணியில் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள். அதிக வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உறவுமுறையில் உற்சாகம் காணப்படும். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சமூகமாக இருக்கும். இன்று அதிக பண வரவு காணும் நிலையில் இருப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்த விதமான பெரிய பிரச் சினையும் இருக்காது.




உங்கள் செயல்களை கண்காணிக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் போராட வேண்டும். சூழ்நிலையை பொறுமையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

சக பணியாளர்களுடன் பயணம் மேற்கொள்வீர்கள். உங்கள் கீழ் பணி புரிபவர்களிடம் கவனமாக இருங்கள்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடத்த வாய்ப்புள்ளது. உங்கள் இருவரிடமும் நல்ல புரிந்துணர்வு இல்லாததே இதற்கு காரணம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. நீங்கள் அதிகம் செலவு செய்வீர்கள். இதனால் பணப் பிரச்சினை உருவாகும்.

பதற்றம் காரணமாக தலை வலி ஏற்படும். தியானம் மூலம் ஆறுதல் பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.06.2025




இன்றைய நாள் உங்களுக்கு உகந்த நாளாக இருக்காது.இன்றைய நாள் சுமூகமாக இருக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணியிடத்தில் கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டியி ருக்கும். உங்கள் பணிகளை திறமையான முறையில் ஆற்ற நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

அகந்தைப் போக்கு காரணமாக உறவில் இணக்கமின்மை காணப்படும்.எனவே இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

தலைவலி மற்றும் முதுகுவலியால் நீங்கள் பாதிக்கப் படலாம். எனவே ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று சிந்தனை மிகுந்த நாளாக இருக்கும். எனவே உங்கள் இலக்கு களை திட்டமிட்டு மேற்கொள்வது நல்லது.

இன்று பணியிடத்தில் மிதமான பலன்களே கிடைக்கும்.நீங்கள் பணியில் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சுமூகமாக இருக்காது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இன்று பணப்பற்றாக்குறை காணப்படும்.

நீங்கள் தலை வலியால் பாதிக்கப்படலாம். ஓய்வுக்கு நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படும். சுய முயற்சி மூலம் உங்கள் கடின உழைப்பிற்கு பலன் பெறுவீர்கள்.

பணியில் பதவி உயர்வு கிடைப்ப தற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

காதலர்களிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் இருவரும் உறவில் கடந்த கால வேறுபாடுகளை மறந்து உறவை புதுப்பிக்கலாம்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் மூலம் நீங்கள் நன்மை அடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் சிறப்பாக பணியாற்று வீர்கள். உங்கள் முயற்சிக்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பாக உறவாடுவீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். பங்கு வர்த்தகம் மூலம் பண வரவு காணப்படும்.

நம்பிக்கையான எண்ணம் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.



# தலைமன்னாரில் கைதான 8 மீனவரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில்!

(மன்னார் நிருபர்)

தலைமன்னார் கடற்பரப்பில் கைதான ராமேஸ்வரம் மீனவர்களை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க மன்னார் நீதிவான் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை உத்தரவிட்டார்.

ராமேஸ்வரம் மீன்பிடி துறை முகத் தில் இருந்து மீன்பிடிக்க சென்று நேற்று ஞாயிறு அதிகாலை எல்லை தாண்டி மீன்பிடித்தமைக்காக மன்னார் வடக்குக் கடற்பரப்பில் வைத்து ராமேஸ்வர மீன வர்கள் எண்மரை தலைமன்னார் கடற்படையினர் கைது செய்தனர்.





அந்த மீனவர்களை தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளைத் தொடர்ந்து மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப் படைத்தனர்.

கடற்தொழில் திணைக்கள அதி காரிகள் விசாரணைகளின் பின்னர் அவர்களை மன்னார் நீதிவான் முன் னிலையில் ஆஜர் படுத்தினர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் அந்த மீனவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தர விட்டார்